Crl.Misc.39.

(Chapter XXIII Code of Criminal Procedure)
the court of the Judicial Magistrate No.VI,Madurai.

Calender .... CC. 1932/2022
Preliminary Register .... PW. 1
Sessions ......

Deposition of witness for Prosecution
Defence
Court

Name .... Sakthipriya
Husband Name .... Suresh
Village .... Mela Anuppanadi, Housing Board, Madurai
Taluk ....
Caste ....
Calling ....
Religion ....
Age ....

**Solemnly affiirmed in accordance with the provisions of Act 44 of 1969 of the day of 28.03.2023**

**முதல் விசாரணை:**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து வருகிறேன். நான் மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் புற்றுநோய் பிரிவில் ரேடியோகிராபராக பணிபுரிந்து வருகிறேன். என் கணவர் நகைப்பட்டறையில் பணிபுரிந்து வருகிறார். கடந்த 06.01.2021ம் தேதி எனது வீட்டிலிருந்து பக்கத்தில் இருக்கும் எனது மாமியார் வீட்டிற்கு சாப்பாடு எடுத்துக்கொண்டு மதியம் 2.15 மணிக்கு APT பள்ளி அருகே நடந்து சென்ற போது இரண்டு நபர்கள் எனக்கு பின்னால் இருந்து இருசக்கர வாகனத்தில் வந்து நான் கழுத்தில் அணிந்திருந்த 61/2 பவுன் தங்கத்தாலிச் செயினை மேற்படி இருசக்கர வாகனத்தில் பின்னால் அமர்ந்திருந்த நபர் அத்துக்கொண்டு இருசக்கர வாகனத்தில் சென்றுவிட்டார்கள். நான் எனது கணவருக்கு தகவல் சொன்னேன். எனது கணவர் வந்தார். நானும் எனது கணவரும் அவனியாபுரம் காவல் நிலையம் சென்றோம். நான் புகார் கொடுத்தேன். புகார் **அ.சா.ஆ.1** ஆகும். பின்பு நான்கு வாரங்கள் கழித்து ஜனவரி மாதத்திலேயே அவனியாபுரம் குற்றப்பிரிவு போலீசார் எனக்கு போன் செய்து எனது தாலிச்செயின் கிடைத்துவிட்டதாக சொன்னார்கள். நான் காவல் நிலையம் சென்று பார்த்த போது என்னுடைய தாலிச்செயினை உருக்கி தங்கக்கட்டியாகவும், பின்பு தாலி மற்றும் இரண்டு காசு, குண்டுமணி மற்றும் 5 கிராம் எடையுள்ள சிறிய தங்கத்துண்டு போலீசார் என்னிடம் காட்டியதை நான் பார்த்தேன். நகையை அடையாளம் காண்பித்தேன். என் செயினை அத்த நபர்கள் ஆஜர் எதிரிகளா என்று எனக்கு நினைவில்லை. போலீசார் இரண்டு நபர்களை காண்பித்தார்கள். அவர்களது முகம் எனக்கு நினைவில்லை. நான் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து மேற்படி 40 கிராம் எடையுள்ள தங்கக்கட்டி

மற்றும் தாலி மற்றும் இரண்டு காசு, குண்டுமணி மற்றும் 5 கிராம் எடையுள்ள சிறிய தங்கத்துண்டு ஆகியவற்றை பெற்றுக்கொண்டேன்.தற்போது புகைப்படத்தில் காண்பிக்கப்படும் மேற்படி நகைகளைத்தான் நான் பெற்றுக்கொண்டேன். புகைப்படம் **அ.சா.ஆ,2** ஆகும். வழக்கு சம்பந்தமாக போலீசார் விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

நான் 2013ம் வருடத்திலிருந்து மதுரை அரசு மருத்துவமனையில் பணிபுரிந்து வருகிறேன். சம்பவ இடத்திற்கு அருகில் குடியிருப்பு வீடுகள் உள்ளது என்றால் சரிதான். புகார் மனுவில் மாமியார் வீட்டிற்கு சாப்பாடு எடுத்துக்கொண்டு சென்றதாக சொல்ல வில்லை என்றால் சரிதான். மாமியாருக்கு சாப்பாடு கொண்டு சென்றேன். நான் எந்த திசையிலிருந்து எந்த திசையை நோக்கி நடந்து சென்றேன் என்றால் கிழக்கிலிருந்து வடக்கு நோக்கி சென்றேன். எதிரிகள் எந்த திசையிலிருந்து வந்தார்கள் என்று தெரியவில்லை. இருசக்கர வாகனத்தில் வந்த நபர்கள் ஹெல்மெட் அணிந்திருந்தார்களா என்றால் வாகனத்தை ஓட்டிய நபர் மட்டும் ஹெல்மெட் அணிந்திருந்தார். செயினை பறிக்கும் போது எனக்கு காயம் ஏற்படவில்லை. நான் புகாரில் என்னுடைய தங்கத்தாலி செயினின் மாடல், வடிவம் மற்றும் காசுமணி, குண்டுமணி இருந்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். தங்கத்தாலி செயின் வாங்கியது பற்றி பில்லை நான் போலீசாரிடம் கொடுக்கவில்லை. சம்பவம் நடந்தவுடன் போலீசார், நான் போட்ட சத்தத்தில் வந்துவிட்டார்கள். நானும் எனது கணவரும் காவல் நிலையத்திற்கு இருசக்கர வாகனத்தில் சென்றோம். இருசக்கர வாகனத்தில் வந்து என் நகையை அத்துச் சென்ற போது மேற்படி இருசக்கர வாகனத்தின் மாடல் மற்றும் பதிவெண்ணை நான் பார்த்தேனா என்றால் இல்லை. புகார் மனுவை யார் எழுதினார்கள் என்றால் நான் தான் எழுதிக்கொடுத்தேன். காவல் நிலையத்தில் மூன்று போலீசார் இருந்தார்கள். நான் சொன்னது போல் சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நான் நகையை எங்கேயோ தொலைத்துவிட்டு பொய்யான புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

Crl.Misc.39.

(Chapter XXIII Code of Criminal Procedure)
the court of the Judicial Magistrate No.VI,Madurai.

Calender .... CC. 1932/2022
Preliminary Register .... PW. 2
Sessions ......

Deposition of witness for Prosecution
Defence
Court

Name .... Suresh
Father Name .... Mothilal
Village .... Mela Anuppanadi, Housing Board, Madurai
Taluk ....
Caste ....
Calling ....
Religion ....
Age ....

**Solemnly affiirmed in accordance with the provisions of Act 44 of 1969 of the day of 28.03.2023**

**முதல் விசாரணை:**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து வருகிறேன். என் மனைவி மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் புற்றுநோய் பிரிவில் ரேடியோகிராபராக பணிபுரிந்து வருகிறார். நான் நகைப்பட்டறையில் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 06.01.2021ம் தேதி எனது வீட்டிலிருந்து பக்கத்தில் இருக்கும் என் அம்மா வீட்டிற்கு என் மனைவி சாப்பாடு எடுத்துக்கொண்டு மதியம் 2.15 மணிக்கு APT பள்ளி அருகே நடந்து சென்ற போது இரண்டு நபர்கள் அவருக்கு பின்னால் இருந்து இருசக்கர வாகனத்தில் வந்து என் மனைவி கழுத்தில் அணிந்திருந்த 61/2 பவுன் தங்கத்தாலிச் செயினை மேற்படி இருசக்கர வாகனத்தில் பின்னால் அமர்ந்திருந்த நபர் அத்துக்கொண்டு இருசக்கர வாகனத்தில் சென்றுவிட்டதாக எனக்கு தகவல் சொன்னார். நான் உடனே சென்றுவிட்டேன். நானும் எனது மனைவியும் அவனியாபுரம் காவல் நிலையம் சென்றோம். என் மனைவி புகார் கொடுத்தார். வழக்கு சம்பந்தமாக போலீசார் விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

சம்பவம் பற்றி எனக்கு நேரிடையாக எதுவும் தெரியாது என்றால் சரிதான் என் மனைவி சொல்லி தான் தெரியும். புகார் மனுவை எப்போது கொடுத்தோம் என்றால் ஒரு மணி நேரம் கழித்து கொடுத்தோம். புகார் மனுவை என் மனைவி தான் எழுதினார். என் மனைவி எங்கேயோ தொலைத்த நகைக்காக அவர் கொடுத்த புகாருக்காக நான் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.